105

III

Total No. of Questions – 6

Total No. of Printed Pages – 3

Regd. No.

## Part – II

## TAMIL, Paper-I

(Second Language)

*Time : 3 Hours ]* *[ Max. Marks : 100*

**Instruction :** சரியான விடைகளை எழுதவும்.

**I.** எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக. **5 × 5 = 25**

1. பாரதத்தாயின் பெருமைகளைப் பாரதியார் எவ்வாறு புகழ்ந்துரைத்துள்ளார்?
2. அக நானூறு பற்றிக் குறிப்பு வரைக.
3. அடக்கமுடைமை பற்றி வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.
4. ஒப்புரவறிதல் பற்றி வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.
5. நாட்டினிலும் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும் பாட்டுகளாகப் பாரதியார் எவற்றை குறிப்பிடுகிறார்?
6. ஆடுக செங்கீரை என்று குமரகுருபரர் வேண்டுமாறு யாங்ஙனம்?
7. 'விடுதலை விளைத்த உரிமை' யென்ற தலைப்பின் கீழ்க் கவியரசர் கண்ணதாசன் உரைப்பனவற்றைத் தொகுத்தெழுதுக.
8. மழைபெய்ய வேண்டி மகளிர் திருமாலை வழிபட்ட பாடற்சுவையை விளக்குக.

II. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக. $2 \times 3 = 6$

1. நலங்கிள்ளியின் படை வீரமும் கொடை வீரமும் குறித்து விளக்குக.
2. கங்கை வேடனும் காளத்தி வேடனும் இறைவனுக்கு அளித்த காணிக்கைகளை விளக்குக.
3. தெ.பொ.மீ அவர்கள் இளமைக்காலத்தில் கேட்ட கதைகள் எத்தகையன?
4. எதனை முதற்கடன் என்று குன்றக்குடி அடிகளார் குறிப்பிடுகின்றார்?

III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. $4 \times 6 = 24$

1. சுவை என்னும் தலைப்பின் கீழ் ஒன்பான் சுவை பற்றியும் மெய்ப்பாடு பற்றியும் ஒரு கட்டுரை வரைக.
2. உயரிய அன்பு நெறியைக் கடைபிடித்து அழியாயப் புகழ் பெற்றனர் காளத்தி வேடனும் கங்கை வேடனும் என்பதனை விளக்கிக் கட்டுரை வரைக.
3. இளங்கோடிகள் செய்த புரட்சி குறித்துத் தெ.பொ.மீ. அவர்கள் கூறியுள்ளவற்றை விவரிக்க.
4. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தும் முறை பற்றி அண்ணா கூறியனவற்றைத் தொகுக்க?
5. திருமூலர் காட்டும் அன்பு நெறியையும் வாழ்க்கை நியதிகளையும் தொகுத்து எழுதக.
6. வீட்டு வாழ்க்கையில் மகளிர் என்ற பொருள் குறித்துக் கட்டுரையாசிரியர் கூறும் கருத்துகளை விளக்குக.

IV. எவையேனும் மூன்றிற்கு இடம், சுட்டிப் பொருள் விளக்கம் தருக. $3 \times 5 = 15$

1. அருள் பழுத்த பழச்சுவையே கரும்பே தேனே
2. கடாஅ யானைக் கழற்கால் பேகன்
3. பகல்வெல்லுங் கூகையைக் காக்கை; இகல் வெல்லும்
4. தேங்கமழ் ஓதி தோற்றாள் செல்வனுக்கு
5. இதுவுய்த்துக் கொடுமோ

V. எவையேனும் இரண்டிற்கு கட்டுரை வடிவில் விடை எழுதுக. $2 \times 10 = 20$

1. ஒரு நாள் கழிந்தது
2. மறுமணம்
3. தேங்காய்த் துண்டுகள்
4. ஒரு பிரமுகர்
5. அனந்தசயனம் காலனி

VI. எவையேனும் பத்திற்கு மட்டும் இலக்கண குறிப்பு வரைக. $10 \times 1 = 10$

1. தொன் மக்கள்
2. உரை காலம்
3. நீங்காப் பூரணமாய்
4. காலமும் தேசமும்
5. விழுப் பொருள்
6. பணிதல்
7. வரையா மரபு
8. பிரிந்தோர்
9. சாஅய்
10. இருந்த தோகை
11. வாழியர்
12. அடங்காமை
13. பெறின்
14. உலகு
15. காக்க

---